செ.வெ.எண்: 338 நாள்: 10.06.2019

**பொதுமக்கள் உழவர்களிடமிருந்து பாரம்பரியமிக்க இயற்கை வேளாண் விளைப்பொருட்களை வாங்கி பயனடைய வேண்டும்.**

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகளின் பாரம்பரிய உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை அரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகளின் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியங்கள், மதிப்பு கூட்டப்பட்ட விவசாய பொருட்கள் அடங்கிய விற்பனை அரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.06.2019) துவக்கி வைத்து பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் குழுக்களால் செயல்படுத்தப்படும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை மேம்படுத்திட மதிப்புக்கூட்டப்பட்ட விவசாய பொருட்களை விற்பனை செய்யும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக புதுக்கோட்டை இயற்கை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், இலுப்பூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் 1000 விவசாய உறுப்பினர்களைக்கொண்டு இயங்கி வருகிறது.

நீடித்த மானாவாரி வேளாண்மை இயக்கத்தின் மூலம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு இயந்திரங்கள் கொள்முதல் செய்திட நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய நிதி உதவி பெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களுக்கான விற்பனை அரங்கினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு திங்கள் கிழமை குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகை புரியும் பொதுமக்கள் அதிக அளவில் தெரிந்து கொண்டு பயனடையும் வகையில் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில் பாரம்பரிய அரிசி வகைகள், மதிப்புக்கூட்டப்பட்ட சிறுதானிய, பயறு மற்றும் 102 வகையான மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பொதுமக்கள் உழவர்களிடமிருந்து நமது பாரம்பரியமிக்க இயற்கை வேளாண் விளைப்பொருட்களை வாங்கி பயனடைய வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.கோமதி தங்கம், வேளாண்மை துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) திரு.இராம.சிவக்குமார், புதுக்கோட்டை இயற்கை உழவர் உற்பத்தியாளர் நிறுவன சேர்மன் திரு.ஆதப்பன் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவன முதன்மை செயல் அலுவலர்கள் திருமதி.அகிலாபாரதி, திரு.இராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**